**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலத் துறை - தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை - அறிவிப்புகள் 2021-2022 - கடலூர் மாவட்டம் வடலூரில் தோட்டக்கலைத் துறை மூலம் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் பண்ணை வரவின நிதியிலிருந்து ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைத்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க1.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.14**

**நாள் 19.01.2022**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**
**பிலவ வருடம், தை 06**

**படிக்கப்பட்டது:**

1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, கடித எண். எப்.பி.எம் 3/5666/2021, நாள் 22.11.2021 மற்றும் 10.01.2022.
2. பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 7674/2021/இ1, நாள் 24.11.2021.

-------

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 14.8.2021 அன்று சட்டப்பேரவையில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்கள் :-

> "தோட்டக்கலைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 24 பூங்காக்கள் பொது மக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகவும், மாணவர்களுக்குப் பயிலும் களங்களாகவும் பல்வேறு வகையான அழகிய, அரிய வகைத் தாவரங்கள் மரங்களைக் கொண்ட தொகுப்பு மையங்களாகத் திகழ்கின்றன. பொதுமக்கள் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கும், தூய காற்றினை சுவாசித்து, பசுமையான சூழலைக் கண்டு மனம் மகிழ்வதற்கும், சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடுவதற்கும், சிறந்த களமாக பூங்காக்கள் விளங்குகின்றன. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து நடப்பாண்டில் கடலூர் மாவட்டம் வடலூர் பேரூராட்சியில் புதிதாக தோட்டக்கலைப் பூங்கா துவங்கப்படும். இத்திட்டம் ஒரு கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்".

2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் தமிழகத்தில் பாரம்பரியமாக மூலிகைச் செடிகள் அன்றாட வாழ்வில் பல்வேறு மருத்துவ பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருவதால் காலப்போக்கில், இவற்றின் முக்கியத்துவம் குறைந்து வருகின்றன என்றும் அதிக ஊட்டச்சத்து தன்மை மற்றும் நோய் எதிர்ப்புசக்தியை மூலிகைகள் வழங்குவதால் பெருந்தொற்று காலங்களில் நோயை குணப்படுத்துவதில் மூலிகைப் பயிர்களின் தேவையை மக்கள் உணர்ந்துள்ளதால் இச்செடிகளின் பல்வேறு பாகங்கள், சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் பல்வேறு நோய்த்தொற்று, மற்றும் வியாதிகளைத் தீர்க்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மூலிகைச் செடிகளின் நடுவே சுற்றி வரும் பொழுது அதன், தனித்துவமான வாசனை நம் உடல் மற்றும் மனதை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது என்றும் மூலிகைச் செடிகளை பாதுகாப்பதை கருத்தில் கொண்டு அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், இப்பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் இப்பூங்கா, அப்பகுதி மக்களுக்கு மட்டுமின்றி அனைத்து பகுதி மக்களுக்கும், ஒரு தாவரவியல் மூலிகைப் பூங்காவாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

**நோக்கம்**

- பல்வேறு வகையான மூலிகைப் பயிர்களை சேகரித்து பராமரித்தல்
- மக்களுக்கு பயன் பெறும் வகையில் மூலிகைப் பயிர்களை அவற்றின் பயன்பாட்டிற்கேற்ப வகைப்படுத்துதல்.
- மூலிகைச் செடிகளைக் கொண்டு இயற்கை சூழலில் யோகா மற்றும் தியானத்திற்கான இடத்தை உருவாக்குதல்
- அலங்காரத் தாவரங்களின்றி மூலிகைப் பயிர்களைக் கொண்டு எழில்மிகு கட்டமைப்புடன் பூங்கா அமைத்தல்
- மூலிகை மரத் தொகுப்புகள், அரியவகை மூலிகைச் செடிகள் தொகுப்பு போன்ற பகுதிகளைக் கொண்டு பூங்கா அமைத்தல்
- முழுமையான சூழலில் மனிதன் மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்துதல்
- மாணவர்களுக்கும், தாவரவியலாளர்களுக்கும் ஒரு பயிற்சிக்களமாக மூலிகைத் தாவரவியல் பூங்காவாக விளங்குதல்

4. இதன் தொடர்பாக, கடலூர் மாவட்டம் வடலூரில் பேரூராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 3.20 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தோட்டக்கலைத் துறை சார்பாக கீழ்க்கண்ட திட்ட இனங்களைக் கொண்டு பூங்கா அமைக்கப்பட உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:–

| வ.எண் | விவரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதர்ச் செடிகளை அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல் | 1.50 |
| 2. | வாகனங்கள் நிற்குமிடம் & நுழைவாயில் | 5.00 |

| வ.எண் | விவரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 3. | நடைபாதை அமைத்தல், இரு மருங்கிலும் மூலிகைச் செடிகள் நடுதல் | 30.00 |
| 4. | அலுவலகம் மற்றும் விற்பனைக் கூடம் | 10.00 |
| 5. | நீர் தேக்கக்கால்வாய் / குளம் அமைத்தல் | 5.50 |
| 6. | பார்வையாளர்களுக்கான கழிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல் | 5.00 |
| 7. | மின் இணைப்பு மற்றும் பூங்கா முழுவதும் ஒளியூட்டல் | 5.00 |
| 8. | ஆழ்துளைக் கிணறு மற்றும் மோட்டார் | 5.00 |
| 9. | நீர்ப்பாசன அமைப்புகள் ஏற்படுத்துதல் | 8.00 |
| 10. | சிறுவர்கள் பூங்கா | 5.00 |
| 11. | ஆங்காங்கே பார்வையாளர்கள் அமர இருக்கை வசதி, மூலிகைத் தொட்டி செடிகள் & கொடி வகைத் தாவரங்களுடன் கூடிய பனைக் குடில்கள் | 10.00 |
| 12. | அலங்கார செடிகளுக்கான கட்டமைப்பு மற்றும் மூலிகைச் செடிகள் நடுதல்–(மூலிகை மரத் தொகுப்புகள், அரிய வகை மூலிகை செடிகள் தொகுப்பு) | 10.00 |
| | மொத்தம் | 100.00 |

5. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் கடலூர் மாவட்டம், வடலூரில் தோட்டக்கலை துறை மூலம் பூங்கா ரூ.1 கோடி நிதியில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்த ரூ.1 கோடி நிதியினை மாநில அரசு நிதியிலிருந்து வழங்கிட அரசாணை கோரியுள்ளார்.

6. பார்வை 2–ல் காணும் கடிதத்தில் பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்கள் கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சி, சேராக்குப்பம் கிராமம் சர்வே எண்.1/1 பகுதி, 1/2 பகுதி, 1/3 பகுதி, 1/5 பகுதி, 3/1 பகுதி, 3/2 முதல் 15 வரை 4 பகுதிகளில் 31.69 ஏக்கரில் அமையப்பெற்ற, ராகவேந்திரா சிட்டி பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது திறவிடம் இடத்தினை (OSR) 139520 சதுர அடி இடத்தினை, தோட்டக்கலைத் துறை மூலம் பூங்கா மற்றும் தோட்டம் அமைப்பதற்கு ஏதுவாக தோட்டக்கலைத் துறைக்கு பராமரிப்புக்காக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளார்.

i. பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் எந்தவித கட்டுமானப்பணிகளும் செய்யக்கூடாது, திறந்தவெளியாக பயன்படுத்திட வேண்டும்.

ii. நிலம் எந்த பயன்பாட்டிற்கு இடம் தேவைப்படுகிறதோ அந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறு காரணங்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

iii. முன் அனுமதி வழங்கிய இடத்தில் 3 மாதத்திற்குள் பணி துவங்கப்படவில்லை எனில், நிலத்தை திரும்ப ஒப்படைத்திட வேண்டும்.

iv. மேற்காண் இடம் பேரூராட்சி கட்டுபாட்டிலேயே இருக்க வேண்டும்.

v. மூன்று ஆண்டுகளுக்கு மேல் இடம் பராமரிப்புக்கு தேவைப்படுமாயின் புதிய கருத்துரு அனுப்பி ஆணை பெற்றுக் கொள்ள வேண்டும்.

7. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து கடலூர் மாவட்டம், வடலூரில் தோட்டக்கலைத் துறை மூலம் ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட ராகவேந்திரா சிட்டி பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 139520 சதுர அடி பொது திறவிடம் இடத்தில், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் பண்ணை வரவின நிதியிலிருந்து செயல்படுத்துமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

8. மேலும், கடலூர் மாவட்டம், வடலூரில் தோட்டக்கலைத் துறை மூலம் பூங்கா அமைக்க தேவைப்படும் பண்ணை வரவின நிதியினைப் பயன்படுத்த தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப்பெற உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறையில் ஆணையிட்டவாறு மூன்று ஆண்டுகளுக்கு மேல் இடம் பராமரிப்புக்கு தேவைப்படுமாயின் புதிய கருத்துரு அனுப்பி ஆணை பெற்றுக் கொள்ளுமாறும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை நிதி (வேளாண்மை–உ.ந) துறையின் அ.சா.எண்.1957/ வேளாண்–உ.ந/2022, நாள் 19.01.2022–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமய மூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்.**

பெறுநர்

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை.5
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை – 5.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை–18
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை–18
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை–9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.

நகல்

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத் துறை, சென்னை – 9.

மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம்.

பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.

நிதித்(வேளாண்–உந) துறை, சென்னை– 9.

வேளாண்மை–உழவர் நலத் (அநமு3 / வ மற்றும் தி) துறை, சென்னை.9

உதவி நிரலர், வேளாண்மைத்–உழவர் நலத் துறை, சென்னை – 9

சம்பந்தப்பட்ட கோப்பு எண்.17897/தோ.க.1–1/2021

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19.1.22

பிரிவு அலுவலர்

19/01/22